# இல்வாழ்வு இயக்கம்

**மது அடிமைகள் நல்வாழ்வு**

கல்லுவிளை இல்வாழ்வு இயக்க மையத்தில் எல்லா வாரமும் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கான சிகிட்ச்சைகளும், ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகிறது. எனவே போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள், குடும்ப பிரச்சினை உள்ளவர்கள், மனநோயாளிகள் போன்றவர்களை அருட்தந்தையர்கள் மற்றும் இறைமக்கள் அனுப்பி பயன்பெற கேட்டுகொள்கிறேன்.

**மாதர் ஜோதிஸ்**

மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் ஆண்டுவிழா மறைமாவட்ட அளவில் ஜனவரி 18 ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணிக்கு கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஜோசப் நெடும்புறம் அவர்கள் வரவேற்புரையும், திருமதி விஜயகுமாரி ஆசிரியர் அவர்கள் வாழ்த்துரையும். அருட்சகோ. லிஸிட் FCC நன்றியுரையும் ஆற்றினார்கள். சிறந்த இயக்குநர், சிறந்த ஒருங்கிணைப்பாளர், சிறந்த அலகு, சிறந்த மறைவட்ட அலகு ஆகியவைகளுக்கு விருதுகளும், வெற்றிக் கோப்பைகளும் வழங்கப்பட்டன. சிறந்த அலகாக மாறப்பாடி தூய தோமையார் அலகும், சிறந்த இயக்குநராக சூசையபுரம் அலகின் இயக்குநர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், சிறந்த ஒருங்கிணைப்பாளன்ட்ச் நித்திரவிளை ஜெயமாதா அலகின் ஒருங்கிணைப்பாளர் அருட்சகோ. மெர்சி ASMI அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



சிறந்த மறைவட்ட அலகுகள்:

| | |
|---|---|
| ஆறுகாணி | : திருக்குடும்ப அலகு, ஆறுகாணி |
| மஞ்சாலுமூடு | : தூய சூசையப்பர் அலகு, காரோடு |
| நித்திரவிளை | : கிறிஸ்து அரசர் அலகு, கிறிஸ்துராஜபுரம் |
| படந்தாலுமூடு | : தூய மரியகொரற்றி அலகு, அதங்கோடு |
| சூசைபுரம் | : கிறிஸ்து அரசர் அலகு, பாலப்பள்ளம் |
| தக்கலை-பிலாங்காலை: | தூய மிக்கேல் அலகு, காட்டாத்துறை |

புதிய நிர்வாகிகள்:

| | | |
|---|---|---|
| ஒருங்கிணைப்பாளர் | : | அருட்சகோ.லிஸட்FCC, சேணங்கோடு |
| தலைவர் | : | திருமதி றோஸ்மேரி, மாறப்பாடி |
| துணைத்தலைவர் | : | திருமதி ஸ்டெல்லா, அதங்கோடு |
| செயலர் | : | திருமதி றீனா, கழுவன்திட்டை |
| இணைச்செயலர் | : | திருமதி சரோஜம், பளுகல் |
| பொருளர் | : | திருமதி புஷ்பம், பிலாங்காலை |

மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்:

| | | |
|---|---|---|
| ஆறுகாணி | : | அருட்சகோ. கொரற்றி SH |
| மஞ்சாலுமூடு | : | அருட்சகோ. ஆன்மேரி SH |
| நித்திரவிளை | : | அருட்சகோ. றோஸ்னி SD |
| படந்தாலுமூடு | : | அருட்சகோ. மெர்ஷி OMMI |
| சூசைபுரம் | : | அருட்சகோ. ஜெயின்மேரி SH |
| தக்கலை-பிலாங்காலை: | | அருட்சகோ. ஆல்பி FCC |

கடந்த ஆண்டு மாதர் ஜோதிஸ் இயக்கத்தை வழிநடத்தியவர்களுக்கு ஆயர் அவர்கள் நன்றி தெரிவித்து பரிசுகள் வழங்கினார்.

**ஆண்டுத் திட்டம்**

மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான திட்டத்தை இல்வாழ்வு இயக்க ஒருங்கிணைப்பாளர் அருட்சகோ.

ஜோஷியா SDS அவர்கள் வெளியிட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**புதிய திட்டங்கள்**

*இவ்வாண்டு முதல் வீர தீரச் செயல் செய்யும் மாதர் ஜோதிஸ் இயக்க உறுப்பினருக்கு "Women of Jyothis" விருது வழங்கப்படும்.

*திருவழிபாட்டு ஆண்டு நாள்காட்டியிலிருந்து வினாடி வினாப் போட்டி மறைமாவட்ட அளவில் நடத்தப்படும். மறைமாவட்ட அளவில் கலந்து கொள்ள அலகு அளவில் வினாடிவினா போட்டி நடத்தி அதிலிருந்து இரண்டுபேர் கொண்ட குழு மறைவட்ட அளவில் போட்டியிட்டு வெற்றிபெறுவோர் மறைமாவட்ட அளவில் கலந்து கொள்ளலாம்.

**குடும்ப ஆண்டு நிறைவு விழா**

குடும்ப ஆண்டு நிறைவு விழா மாதர் ஜோதிஸ் ஆண்டு விழாவுடன் இணைந்து நடைபெற்றது. திருமதி பெனிலா அவர்கள்



அறிக்கை சமர்ப்பித்தார். ஆயர் அவர்கள் மாதர் ஜோதிஸ் இயக்கப் பணிகளை வாழ்த்தி தலைமையுரையாற்றினார். 2014ஆம் ஆண்டு

திருச்சபையில் சேர்ந்த குடும்பத்தினரை வாழ்த்திப் பரிசுகள் வழங்கினார். குடும்ப ஆண்டை முன்னிட்டு சேகரிக்கப்பட்ட திருமண உதவி நிதி ரூபாய் 27100/- மாறப்பாடி ஆலயத்திலுள்ள திருமதி வசந்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது. திருமண உதவி நிதியை மாதர் ஜோதிஸ் இயக்கத்தினர் தொடர்ந்து செய்வார்கள். எனவே திருமண நேரங்களில் அருட்தந்தையர்கள் இந்நிதியை அறிவித்து ஆண்டு இறுதியில் வழங்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவ்வாண்டில் சிறந்த பணிகள் செய்த இயக்கமாக மரியாயின் சேனை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆயர் அவர்கள் கோப்பை வழங்கினார்.

**திருமண பயிற்சி**

ஜனவரி 16 முதல் 18 வரை நடைபெற்ற திருமண தயாரிப்பு பயிற்சி வகுப்புகளில் 27 பேர் கலந்து கொண்டனர். ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கினார். அருட்சகோ. ஜோஷியா, திருமதி சுதா மாலைக்கோடு ஆகியோர்கள் வழிநடத்தினார்கள். அடுத்த வகுப்புகள் மார்ச் மாதம் 3வது வாரம் நடைபெறும். பயிற்சிக் கட்டணம் ரூ500/-

**வந்து பாருங்கள் செபக்குழு**

வந்து பாருங்கள் செபக்குழுவின் ஒருநாள் தியானம் முதல் சனிக்கிழமை அழகியமண்டபம் FCC இல்லத்திலும், இரண்டாம் சனிக்கிழமை பளுகல் ஆலயத்திலும், மூன்றாம் சனிக்கிழமை பாலப்பள்ளம் ஆலயத்திலும் நடைபெற்றது. பளுகல் தியானத்தில் பங்கேற்றுக்கொண்டிருந்த 12 ஆண்டுகள் குழந்தை பேறின்றி இருந்த தம்பதியினருக்கு குழந்தை பேறு கிடைத்தாக அப்பேற்றோர் சாட்சி கூறினார்.

**தசாம்சா கிளப்**

தசாம்சா கிளப்பின் கடந்த கூட்டம் ஜனவரி இரண்டாம் ஞாயிறு அன்று திரு ஜார்ஜ் ஜோசப் மணிவிளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தசம பாகமாய் கிடைத்த ரூ10420/- ஏழை ஒருவரின் இல்லம் அமைக்க வழங்கப்பட்டது. இதுவரை கிடைத்த மொத்தம் 451521/- ரூபாய் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டுள்து. தற்போது திரு. தேவநேசன் மத்தம்பாலை அவர்களின் குடும்பம் இக்கிளப்பில் புதிதாக இணைந்துள்ளனர்.

# Family Apostlate

**1. മദ്യവിമുക്ത ചികിത്സ, കൗൺസലിംഗ്**

കല്ലുവിള ഫാമിലി അപ്പോസ്റ്റലേറ്റ് ഇലിയ്യേല-ൽ എല്ലാ ചൊവ്വ, ബുധൻ, വ്യാഴം ദിവസങ്ങളിൽ മദ്യവിമുക്ത ചികിത്സയും, കൗൺസലിംഗും നടത്തപ്പെടുന്നു. മദ്യപാനികൾ, മനോരോഗികൾ, ഫാമിലി പ്രശ്നങ്ങൾ ഉള്ളവരെ പറഞ്ഞു വിടണമെന്ന് ഓർമ്മിപ്പിക്കുന്നു.

**2. മാതൃജ്യോതിസ് :** മാതൃജ്യോതിസിന്റെ രൂപതാ വാർഷികം 2015 ജനുവരി 18 ഞായറാഴ്ച 1.30 മണിക്ക് കല്ലുവിള ആശീർ ഓഡിറ്റോറിയത്തിൽ അ□വന്ദ്യ പിതാവിന്റെ അദ്ധ്യക്ഷതയിൽ നടന്നു. ശ്രീമതി വിജയകുമാരി ടീച്ചർ ആശംസ പ്രസംഗം നടത്തി. ഡയറക്ടർ ഔസേപ്പച്ചൻ സ്വാഗതവും, ട്യ. ലിസിറ്റ് എഇഇ നന്ദിയും പറഞ്ഞു. ആലഭെ ഉശ്വലരഭ്യീ, ആലഭെ അിശാമഭ്യീ, ആലഭെ ഡിശഭേ, എ്യീമില ആലഭെ ഡിശഭേ എന്നിവർക്ക് അവാർഡുകളും, ട്രോഫികളും നൽകി.

| | | |
|---|---|---|
| Best Unit | : | St. Thomas Church Unit – Marappady |
| Best Director | : | Fr. Antony Jose, St. Joseph Church Unit Director, Soosaipuarm |
| Best Animator | : | Sr. Mercy ASMI, Jayamatha Church Unit Animator, Nithravilai |

**<u>Forane Best Units</u>**

| | | |
|---|---|---|
| Arukani Forane | : | Holy Family Church Unit, Arukani |
| Manjalumoodu Forane | : | St. Joseph Church Unit , Karode |
| Nithravilai Forane | : | Christuraja Church Unit, Christurajapuram |
| Padanthalumoodu Forane | : | St.Maria Goretti Church Unit, Athencode |
| Soosaipuram Forane | : | Christ the King Church Unit, Palppallam |
| Thu – Plankalai Forane | : | St. Michael's Church Unit, Kattathurai |

**<u>മാതൃജ്യോതിസ് 2015 ഭാരവാഹികൾ</u>**

| | | |
|---|---|---|
| Animator | : | Sr. Liset FCC, Chenamcode |

| | | |
|---|---|---|
| President | : | Tmt. P.M. Rose Mary, Marapady |
| Vice President | : | Tmt. J. Stella, Athamcode |
| Secretary | : | Tmt. B. Reena, Kazhuvanthittai |
| Joint Secretary | : | Tmt. Sarojam, Palukal |
| Treasurer | : | Tmt. R. Pushpam, Plankalai. |

**<u>Forane Animators</u>**

| | | |
|---|---|---|
| Thu-Plankalai Forane | : | Sr. Alby FCC |
| Manjalumoodu Forane | : | Sr. Ann Mary SH |
| Soosaipuram Forane | : | Jain Mary SABS |
| Arukani Forane | : | Sr. Goretti SH |
| Nithravilai Forane | : | Sr. Roshni SD |
| Padanthalumoodu Forane | : | Sr. Mercy OMMI |

കഴിഞ്ഞ വർഷം മാതൃജ്യോതിസിനെ നയിച്ചവർക്ക് നന്ദി പറയുകയും അഭിവന്ദ്യ പിതാവ് സമ്മാനം നൽകുകയും ചെയ്തു.

**മാതൃജ്യോതിസ് 2015:** പുതുവർഷത്തിലെ മാർഗ്ഗരേഖ (Year Plan) ഫാമിലി അപ്പോസ്തലേറ്റ് Animator Sr. Josya SDS വികാരി ജനറാൾ Very. Rev. Fr. Jose Muttathupadam -ന് നൽകി പ്രകാശനം ചെയ്തു.

**പുതുവർഷ ആദരവുകൾ:** Best Unit, Best Director, Best Animator, Best Forane Unit

ശ്രേഷ്ഠവും, ധീരവുമായ ഒരു പ്രവർത്തി ചെയ്യുന്ന മാതൃ ജ്യോതിസ് അംഗത്തിന് "Women of Jyothis" അവാർഡ് നൽകും.

തിരുവഴിപാട് കലണ്ടറിൽ നിന്ന് രൂപതാ തലത്തിൽ ക്വിസ്സ് മത്സരം നടത്തും. അതിനു മുന്നോടിയായി യൂണിറ്റ് തലത്തിൽ മത്സരം നടത്തി 2 പേരുള്ള ഒരു ടീമിനെ Select ചെയ്തു നൽകണം. അവർ Forane തലത്തിൽ മത്സരിക്കുകയും അതിൽ നിന്നുള്ള വിജയികൾ Final മത്സരത്തിന് അർഹരാകും.

2. **ജ്യല ങദ്മ്യശമഴല ഇീൗൃലെ :** 2015 ഖമിൗമ്യ 16, 17,18 തിയതികളിൽ നടന്ന വിവാഹ ഇീൗൃലെൽ 27 പേർ പങ്കെടുത്തു. പ്രഗത്ഭർ ക്ലാസ്സുകളെടുത്തു. അ ിവന്ദ്യ പിതാവ് വി. ബലിയർപ്പിച്ച് സന്ദേശം നൽകി. ട്യ. ഖീഷ്യമ, സുധ മാലക്കോട് എന്നിവർ അിശാമലേ ചെയ്തു. അടുത്ത ഇീൗൃലെ ങദ്മൃരവ മൂന്നാമതു ആഴ്ച നടക്കും. ഇീൗൃലെ എലല 500/- രൂപ.

3. **എമാശഹ്യ ഥലമ്യ ഇീരഹൗശീി :** എമാശഹ്യഥലമ്യ ഇീരഹൗശീി മാതൃജ്യോതിസ് വാർഷികത്തോടനുബന്ധിച്ചു നടത്തി. ശ്രീമതി ആലിശഹാ, ഞലഥ്വ്വ അവതരിപ്പിച്ചു. അ ിവന്ദ്യ പിതാവ് പ്രവർത്തനങ്ങളെ അ ിനന്ദിച്ചു സംസാരിച്ചു. 2014-ൽ സത്യ സ യിലേക്ക് ചേർന്ന ഏതാനും കുടുംബത്തെ ആദരിച്ചു. കുടുംബ ആണ്ട് പ്രമാണിച്ച് ഇീഹഹലരേ ചെയ്ത വിവാഹ സഹായ നിധി ഞ്ഞ. 27100/- മാറപ്പാടി ചർച്ചിലുള്ള 4 പെൺമക്കളുള്ള ശ്രീമതി വസന്തയ്ക്ക് കൈമാറി.

കുടുംബ ആണ്ടിൽ ഏറ്റവും നല്ല പ്രവർത്തനം കാഴ്ച വച്ച 'ക്ത ഇയക്കമായി "മരിയൻ സേന"യെ തിരഞ്ഞെടുത്തു. അ ിവന്ദ്യ പിതാവ് ട്രോഫിയും നൽകി. വിവാഹ സഹായ നിധി മാതൃജ്യോതിസ് ഏറ്റെടുത്ത് തുടരുന്നതാണ്. പങ്കുകളിൽ വിവാഹ അവസരങ്ങളിൽ അച്ചൻമാർ അറിയിച്ച് ഒരു പാവപ്പെട്ട പെൺകുട്ടിയെ സഹായിക്കും.

4. **വന്തു പാരുകൾ പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പ് :** പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പിന്റെ ആ ിമുഖ്യത്തിൽ 1-ാം ശനിയാഴ്ച അഴകിയ മണ്ഡപം എഇഇ 'വനിലും 2-ാം ശനിയാഴ്ച പളുകൽ ചർച്ചിലും 3-ാം ശനിയാഴ്ച പാലപ്പള്ളം ചർച്ചിലും ഏകദിന ധ്യാനങ്ങൾ നടന്നു. 12 വർഷം കുഞ്ഞുങ്ങളില്ലാതിരുന്ന ഒരു ദമ്പതിക്ക് പ്രാർത്ഥനയിലൂടെ കുഞ്ഞു ല ിച്ചതായി പളുകൽ ചർച്ചിൽ സാക്ഷ്യപ്പെടുത്തി.

5. **ദശാംശ ക്ലബ്ബ് :** പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പിന്റെ ജീവകാരുണ്യ വn'ാഗമായ ദൈവീക ദശാംശ ക്ലബ്ബ് ജനുവരി 2-ാം ഞായറാഴ്ച ശ്രീ. ജോർജ്ജ് ജോസഫ് മണിവിളയുടെ □വനത്തിൽ നടത്തി. ദശാംശമായി 10420/- രൂപ ല□ിച്ചു. ഇത് പാവപ്പെട്ട ഒരു കുടുംബത്തിന് □വന നിർമ്മാണത്തിന് നൽകി. ഇതുവരെ 451521 രൂപയുടെ ജീവകാരുണ്യ പ്രവർത്തനങ്ങൾ ഈ ക്ലബ്ബ് വഴി നടന്നു. ശ്രീ. ദേവനേശൻ മത്തംപാലയുടെ കുടുംബം പുതുതായി ദശാംശ ക്ലബ്ബിൽ ചേർന്നു.

**Rev Fr. Joseph Nedumpuram,**
Director.

# வின்செண்ட் தே பவுல் சபை

## திட்ட உதவி வழங்குதல்

பென்கிரி புனித பெனடிக்ட் வின்செந்திய கிளைச்சபை சார்பில் திட்ட உதவி வழங்கும் விழா 04-01-2015 ஞாயிற்றுக்கிழமை அன்று கிளைச்சபை தலைவர் சகோ. தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 15 பயனாளிகளுக்கு ரூபாய் 75,000 பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வுதவியை பென்கிரி பங்குத்தந்தை அருட்தந்தை ஜிஜோ அவர்கள் வழங்கினார்கள். சிறப்புற நடைபெற்ற இவ்விழாவில் மத்திய சபை தலைவர் சகோ. ஐயாத்துரை, மத்திய சபை துணைத் தலைவர் சகோ. சௌந்தர்ராஜ், வட்டார சபை தலைவர் சகோ. ராஜா எறிக் காட்வின் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## மஞ்சாலுமூடு வட்டார சபை கூட்டம் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்ட பயிற்சி



மஞ்சாலுமூடு வட்டார சபையின் ஜனவரி மாதக்கூட்டம் 18-01-2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு வட்டார சபை துணைத் தலைவர் சகோ. ஏசுதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வட்டார சபை ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். குழித்துறை நீதிமன்ற வழக்கறிஞர் எட்வின் அவர்கள் "தகவல் அறியும் உரிமைச் சட்டம்" (Right To Information Act) குறித்து வகுப்பு நடத்தினார். இச்சட்டம் எந்த வகையில் சாதாரண மக்களுக்கு பலனளிக்கும், எப்படி இதை பயன்படுத்த வேண்டும், இதன் நன்மைகள் என்னென்ன என்பதைக்குறித்து தெளிவாக விளக்கினார். இக்கூட்டத்தில் மத்திய சபை உறுப்பினர்கள்

சகோ. மணிவண்ணன், சகோ. ஜோஸ் பெருமன, சகோ. வில்சன், சகோ. சுரேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இளைஞர் பாசறை முகாம்-2015

தக்கலை மத்திய சபையின் இளம் வின்செந்தியர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் ஜனவரி 30 முதல் பிப்ரவரி 1 வரை மூன்று நாட்கள் நெட்டா அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

### முதல் நாள்

ஜனவரி 30 வெள்ளிக்கிழமை இரவு7.00 மணிக்கு விவிலியப் பவனியுடன் ஆரம்பமான தொடக்க விழாவில் ஆன்மீக ஆலோசகரும், குருகுல முதல்வருமான பேரருட்தந்தை அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடக்க உரையாற்றி முகாமை தொடங்கி வைத்தார்கள். மத்தியசபைச் செயலர் சகோ. எட்வின்சன் அவர்கள்



வரவேற்புரையும், தலைமைப் பணியாளர் சகோ. ஐயாத்துரை அவர்கள் வாழ்த்துரையும், நெட்டா பங்குத் தந்தை ஜோசப் ஆனித்தோட்டம் அவர்கள் ஆசிரையும், தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் வின்செந்திய இளைஞர் கடைபிடிக்க வேண்டிய குணங்கள் பற்றியும் சிறப்புரை வழங்கினர். சகோ. வென்சஸ்லாஸ் ஆசிரியர் அவர்கள் ஒப்புரவு தயாரிப்பு பற்றிய தியானம் நடத்தினார். மத்தியசபை இணை இளைஞர் பிரதிநிதி சகோ. ஷாஜன் நன்றியுரையாற்றினார். இரவு உணவுக்குப்பின் கல்வி திட்ட அலுவலர் சகோ. சோனிக் ரீகன் அவர்களால் குழுக்கள் பிரிக்கப்பட்டு, பெயரிடப்பட்டு, முகாம் பற்றிய விதிகளும் அறிமுகம் செய்யப்பட்டது. இறுதியில் மகளிர் பிரதிநிதி சகோ. லதா அவர்கள் இரவுசெபம் செய்ய, அனைவரும் துயிலுறச் செல்ல முதல் நாள் முகாம் நிறைவடைந்தது.

## இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் காலை 6.30 மணிக்கு நெட்டா கிளைச்சபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோசப் ஆனித்தோட்டம் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. திருப்பலிக்குப் பின் வின்செந்திய இளைஞர்கள் அனைவரும் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்றனர். தொடர்ந்து காலை உணவும்,



வட்டாரசபை இளைஞர் பிரதிநிதிகளால் சிறு விளையாட்டுகளும் நடத்தப் பட்டது. பின்னர் கோட்டாறு மறைமாவட்டம் கொட்டில்பாடு அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் 'நிலைவாழ்வை உரிமையாக்க உதவிடும் வின்செந்திய அழைப்பு' என்ற தலைப்பில் முதல் கருத்துரையை வழங்கினார். தேநீர் இடைவேளைக்குப்பின் நடைபெற்ற இரண்டாம் கருத்துரையை மணலிக்ரை ஆசிரியரும், உளவியல் நிபுணருமான திரு. ஜாண் இளங்கோ அவர்கள் 'இளமையின் சவால்கள்' என்ற சிந்தனையிலும், 'பருவ மாற்றங்களும், ஆற்றுப்படுத்துதலும்' என்ற தலைப்பில் ஆண்களுக்கு திரு. ஜாண்இளங்கோ அவர்களும், பெண்களுக்கு பரக்குன்று திருமதி ரெஜினிறாபின் அவர்களும் தனித்தனியாக மூன்றாம் கருத்துரையை வழங்கினர். மதிய உணவுக்குப்பின் ஒவ்வொரு குழுக்களுக்கும் ஒவ்வொரு தலைப்புகள் கொடுக்கப்பட்டு குழுவிவாதம் நடைபெற்றது. தொடர்ந்து மதியம் 3.00 மணிக்கு 'இயற்கை நோக்கி நடைபயணம்' என்ற சிந்ததனையில் அப்பகுதி சுற்றி பார்க்கப்பட்டு அப்பகுதி மக்களை அவர்களின் இல்லங்களில் சந்தித்து உரையாடலும் நடைபெற்றது. தேநீர் இடைவேளைக்குப்பின்

முஞ்சிறை பெண்கள் கிளைச்சபையின் சகோ. லதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற நான்காம் கருத்துரையை மத்தியசபை இளைஞர் பிரதிநிதி சகோ. பெர்லின் அவர்கள் 'தூய வின்சென்ட் தே பவுல் கண்ட பிறரன்பு பணி' பற்றியும், சூசைபுரம் வட்டார சபை தலைவர் சகோ. லாரன்ஸ் அவர்கள் '20 வயதில் ஓசானாம் என்ற தலைப்பில்' ஐந்தாவது கருத்ரையையும் வழங்கினார். ஆறாவது கருத்துரையை மார்த்தாண்டம் மறைமாவட்டம் இலவுவிளை மார் எப்ரேம் கல்லூரி தாளாளர் அருட்தந்தை பிரேம் குமார் அவர்கள் 'திருச்சபையைத் தாங்கும் விழுதுகளே ஆளுமையின் நற்பண்புகளால் வார்த்தெடுக்கப்பட்ட இளைஞர்கள்' என்ற தலைப்பில் வழங்கினார். தொடர்ந்து பிலாங்காலை புனித மேரி கிளைச்சபையின் சகோ. பபிஷா ஜூலியட் அவர்கள் தலைமையில் செபமாலைப் பவனியும் தொடர்ந்து இரவு விருந்தும் நடைபெற்றது. இரவு உணவுக்குப்பின் மத்தியசபை திட்ட மேற்பார்வையாளர் சகோ.ஷிபு மற்றும் செய்தித்தொடர்பாளர் சகோ. சுரேஷ்குமார் அவர்கள் தலைமையில் 'கேம்ப் பயர்' என்னும் பாடித்திய நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மத்தியசபை துணைத்தலைவரும், தமிழக மண்டல சபை செயலருமான சகோ. சௌந்தரராஜ் அவர்கள் ஒளியேற்றி தொடங்கி வைக்க, ஒவ்வொரு குழுக்களும் தங்களின் தனித்திறனை வெளிப்படுத்தினார்கள். தொடர்ந்து மத்திய சபை மகளிர் பிரதிநிதிகளால் துயிலுக்கு முன் வரும் செபம் செய்ய அனைவரும் துயிலுறச் சென்றனர்.

**மூன்றாம் நாள்**

நிறைவு நாளான பிப்ரவரி 1 ஞாயிற்றுக்கிழமை மத்தியசபைச் செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஏழாம் கருத்துரையை பிலாங்காலை மகளிர் கிளைச்சபை சசோ. பபிஷா அவர்கள் 'வின்செந்திய வாழ்வுக்கு வழிகாட்டிய ரோசாலி ரெந்து' என்ற தலைப்பிலும், நித்திரவிளை வட்டாரசபைத் தலைவர் சகோ. வின்சென்ட்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எட்டாம் கருத்துரையை மாலைக்கோடு புனித ஜார்ஜியார் கிளைச்சபையின் சகோ. ஜெயக்குமார் அவர்களும் வழங்கினர். தொடர்ந்து குழுவிவாதத்தில் நடைபெற்ற ஆய்வு அறிக்கைகள் மத்தியசபைத் தலைவர் மற்றும் ஸ்வீகார அலுவலர் சகோ. றாபி அவர்கள்

முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது. காலை உணவுக்குப்பின் நடைபெற்ற இறுதி கருத்துரையை மத்தியசபை நிர்வாகக்குழு உறுப்பினர் குமரித்தோழன் அவர்கள் 'வின்செந்திய உறுப்பினரிடம் சமுதாயம் எதிர்பார்ப்பவை' என்ற தலைப்பில் வழங்கினார். பின்னர் ஆயர் அவர்கள் வின்செந்திய இளைஞர்களின் வாழ்வை அர்ப்பணித்து ஆலயத்தில் திருப்பலியும் மறையுரையாற்றி, புகைப்படமும் எடுத்துக்கொண்டு விடைபெற்றார்.

**முகாம் நிறைவு**

தொடர்ந்து முகாம் நிறைவு விழா நடைபெற்றது. இந்நிறைவு விழாவில் மத்தியசபை செயலர் வரவேற்க, இளைஞர் பிரதிநிதி



முகாம் அறிக்கை சமர்ப்பிக்க, தமிழக மண்டலசபை ஒருங்கிணைப்பாளர் சகோ. வின்சென்ட் அவர்கள் சிறப்புரையும் ஆற்றினர். தொடர்ந்து இளைஞர்கள் தங்கள் பெற்ற முகாம் அனுபவத்தை பகிர்ந்துகொண்டனர். மண்டலசபை செயலர் அவர்கள் சிறந்து செயல் திறனாளர், சிறந்த குறிப்பாளர், சிறந்த குழு ஆகியவற்றிற்கான பரிசுகளை வழங்கி வாழ்த்துரையுமாற்றினார். தொடர்ந்து இளைஞர் இணைபிரதிநிதி சகோ. ஷாஜன் நன்றி கூற அனைத்து வின்செந்திய இளைஞர்களும் கண்ணீர் மல்க விடைபெற்றனர். இம்முகாமில் மொத்தம் 47 வின்செந்திய இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். முகாம் ஒருங்கிணைப்பாளர் சகோ. ஷாஜன் மற்றும் மத்தியசபை நிர்வாகக்குழுவினர் முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

சகோ. சுரேஷ் குமார்,

செய்தித்தொடர்பாளர்.

# அருட்சகோதரர்களிடமிருந்து...

அனைத்து அருட்சகோதரர்களும் தங்களின் கிறிஸ்மஸ் விடுமுறை முடித்து ஜனவரி 5 அன்று தங்கள் குருத்துவ கல்லூரிகளுக்கு வந்தடைந்தனர்.

**வடவாதூர்**

வடவாதூர் உயர்குருமடக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா ஜனவரி 12 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் இக்கல்லூரியி லிருந்து புதிதாக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்தந்தையர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி தங்களின் புதிய குருத்துவ அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும் கடந்த கல்வியாண்டு வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. குடியரசு தினமான ஜனவரி 26 அன்று அருட்சகோதரர்கள் கல்வி பற்றிய கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றது. வடவாதூரில் பயிலும் அருட்சகோதரர்கள் வினு மற்றும் அனில்ராஜ் ஆகியோர் நலமாகவும் தங்கள் பணிகளை நேர்த்தியாகவும் செய்து வருகின்றனர்.

**உஜெயின்**

தற்போது உஜெயினில் 3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகிறது. குளிரான சூழ்நிலை காணப்படுவதால் முதலாண்டு அருட்சகோதரர்கள் தவிர மற்ற அருட்சகோதரர்களும் அனைவரும் உற்சாகமாக காணப்படுகின்றனர். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விழா வழக்கத்தைவிட சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்சகோதரர்கள் கிறிஸ்மஸ் விழா நிகழ்வுக்காக வெவ்வேறு திருத்தொண்டுதளங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று கிறிஸ்மஸ் குடில் அமைத்தார்கள். ஆண்டிற்கு இருமுறை நடைபெறும் இரண்டாவது தியானம் ஜனவரி 11 முதல் 15 வரை நடைபெற்றது. ஜனவரி 13 அன்று அப்பகுதிக்கு பஞ்சாயத்து தேர்தலும் 30 அன்று அருட்சகோதரர்களுக்கு பிரிவு வாரியாக நாடகப் போட்டிகளும் நடைபெற்றது.

**மங்கலப்புழ**

இக்கல்லூரியில் பயின்று புதிதாக அருட்பொழிவு செய்யப்பட்ட நவகுருக்களின் நாள் ஜனவரி 12 அன்று சிறப்பாகக்

கொண்டாடப்பட்டது. 21 மற்றும் 22 ஆகிய இரு தினங்கள் அருட்சகோதரர்களுக்கு சுற்றுலாவும் நடைபெற்றது. 29 மற்றும் 30 ஆகிய இருதினங்கள் சர்வதேச அளவிலான பேச்சுவழக்கு பற்றிய கருத்தரங்குகள் நடைபெற்றது.

**திருத்தொண்டர்கள்:**

திருத்தொண்டர்களுக்கு தற்போது நடைபெற்று வரும் டீக்கன் மினிஸ்டிரிஇம்மாதம் 28 அன்று நிறைவு பெறும்.

அருட்சகோ. அனில்ராஜ்
குருமாணவர் தலைவர்

---

## உயர்கல்வி வழிகாட்டுதல் பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு எஜுபேர் என்னும் உயர்கல்வி வழிகாட்டுதல் பயிற்சி மற்றும் ***ISRO*** –வின் விண்வெளி கண்காட்சி கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் ஜனவரி 10 அன்று நடைபெற்றது. குருகுல முதல்வரும் சமூக சேவை சங்கத் தலைவருமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றி பரிசுகளையும் வழங்கினார். சிறப்பு விருந்தினராக மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி தாளாளர்அருட்தந்தை பிரேம் குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் சுமார் 2000 மாணவ மாணவியர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்வின் இறுதியில் ஒருங்கிணைப்பாளர் திரு. ஆரோக்கிய சூசை நன்றிகூறினார்.




அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
இயக்குநர்

# அன்பின் சங்கமம்

தக்கலை நண்பர்கள் இயக்கத்தின் 15-ஆவது "அன்பின் சங்கமம்" என்னும் ஆண்டுவிழாவானது தக்கலை சங்கமத்தில் வைத்து 2015 ஜனவரி திங்கள் 16-ஆம் நாள் மாலை 4.00 மணி அளவில் குமரி சினேகாவின் இறைவணக்கப் பாடலோடு இனிதே தொடங்கியது.

கலை, பண்பாடு, மதம் இவற்றால் மனிதனை இணைக்க இயலாது. மனித நேயம் ஒன்றே மனிதனை புனிதனாக மாற்றும் என்னும் நற்சிந்தனையுடன் தொடங்கப்பட்டது தான் தக்கலை நண்பர்கள் இயக்கம். கிறிஸ்தவ, இந்து, முஸ்லீம் சகோதர சகோதரிகள் இணைந்து நடத்திய இவ்விழாவில் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார்கள். அரிமா ராதாகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். தொடர்ந்து நண்பர்கள் இயக்கம் ஒரு அறிமுக உரை என்னும் தலைப்பில் இதுவரை இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் குறித்து முனைவர் Fr. கிறிஸ்துதாஸ் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள்.



தலைமையுரை நிகழ்த்திய மேதகு ஆயர் அவர்கள் தமது உரையில் ஆண்டிற்கு ஒருமுறையல்ல, பலமுறை நண்பர்கள் நாங்கள் இணைந்து பல்வேறு கருத்துக்கள் பரிமாறி தீர்வு கண்டிருக்கின்றோம். பொங்கல் விழா ஒரு தனி மனித விழா அல்ல; பலர் கூடி கொண்டாடும்போது தான் அது விழாவாகும். "சகோதரர்கள் ஒன்றுபட்டு வாழ்வது எத்துனை நன்று" என்று திருவிவிலியம் எடுத்தியம்புகிறது. அதுபோலவே சகோதரர்களாகிய நாம் ஒன்றுபட்டு வாழ்ந்து நமது அன்பை பகிர்ந்து கொள்ளும் இடமே இந்த "அன்பின் சங்கமம்". பலரும் நம்மைப் பார்த்து; ஏன் நம் வாழ்வை பார்த்துப் படிக்க வேண்டும். மனிதர்களாகிய நாம் மனித நேயத்துடன் வாழ்வோம் எனக் கூறினார்.

வாழ்த்துரை வழங்கிய திரு. குமரி ஆதவன் அவர்கள்; கிறிஸ்தவம் "தன்னைத்தான் நேசிப்பது போல பிறரை நேசிக்க கற்றுக் கொடுக்கின்றது. இதைத்தான் பிற மதங்களும் எடுத்தியம்புகிறது. இறைமகன் இயேசு கேட்கிறார் "நான் பசியாயிருந்தேன்; தாகமாயிருந்தேன்; ஆடையின்றி இருந்தேன்; நோயுற்றிருந்தேன்; சிறையிலிருந்தேன்; எனக்கு உதவி செய்தாயா? என்னை சந்தித்தாயா? சின்னஞ்சிறிய ஒருவனுக்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள். மதத்தை இறைமகன் முன்வைக்கவில்லை. மனித நேயத்தையே முன் வைக்கிறார். ஆக கிறிஸ்தவம் மனித நேயத்துடன் வாழவே ஒவ்வொருவரையும் படிப்பிக்கின்றது. பண்படுத்துகின்றது. அழைப்பு விடுவிக்கின்றது எனக் கூறி நிறைவு செய்தார்.

திரு. தக்கலை ஹலீமா அவர்கள் தமது வாழ்த்துரையில், மண்ணிலிருந்து படைக்கப்பட்டவன் மனிதன். ஆகவே தான் மண் சார்ந்த விழாவை மனிதன் கொண்டாடுகின்றான். 1998 முதல் இந்த நல்ல இயக்கத்தில் உறுப்பினராக இருந்து வருகிறேன். பணி ஓய்விற்குப் பின் அன்பைப் பற்றியே எழுதி வருகிறேன். இவ்விழாக்கள் ஆண்டிற்கு ஒருமுறையல்ல அடிக்கடி நடத்த வேண்டும். இஸ்லாம் அன்பையே ஆணித்தரமாக அறிக்கையிடுகின்றது. அதையே ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும். அதற்கு இவ்விழா ஒரு உந்து சக்தியாக அமையட்டும் என வாழ்த்துகிறேன் எனக் கூறி நிறைவு செய்தார்.

திரு. ரவி சங்கர் அவர்கள் தமது வாழ்த்துரையில் மனிதன் சூழ்நிலைக்கு கட்டுப்பட்டவன். ஒரு மதவாதியால் கூட மனசாட்சிக்கு கட்டுப்பட்டு நடக்க இயலாத காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். இறைப்பணிக்கு ஈரமுள்ள இதயம் போதும். ஒரு மீனவப் பெண்மணி இன்று "அம்மா" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகிறார். அது அன்பால் மட்டுமே முடியும். சமூகத்தில் பிரச்சனைகள் வரும்போது எதன் பின்னும் ஓடி ஒளியாமல்; இறைவனுக்கு முக்கியத்துவஙம கொடுத்து வாழ்பவர்களாக நாம் மாறவேண்டும். "லோகா சமஸ்தா சுகிர்தோ" நாம் இறைவனை பற்றி மட்டுமே யோசிக்க வேண்டும். அவரை நேசிக்க வேண்டும். சிலுவையில் தொங்கிய இயேசு சொல்வார் "இவர்கள் செய்வது

என்னதென்று தெரியாமல் செய்கிறார்கள் என்று" நம்மைப் பார்த்து அப்படிக் கூறும் நிலை வரக் கூடாது. மாவட்டத்தில் மறுமலர்ச்சியை அன்பால் கொண்டு வருவோம் எனக் கூறி தமது உரையை நிறைவு செய்தார். பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் தமது உரையில்; ஒவ்வொரு மனிதரிலும் இருவர் இருக்கிறன்றனர். ஒன்று ஒளி மற்றொன்று இருள். ஒளி நன்மையில் வாழ்பவர்கள். இருள் தீமையில் வாழ்பவர்கள் தீவிரவாதிகள். நாம் ஒளியின் மக்களாக வாழ்வோம் எனக் கேட்டுக் கொண்டார். இடையிடையே திரு. தங்கப்பன், திருமதி. பட்டம்மாள் நாராயணன், திரு. பஞ்சமி ராமச்சந்திரன் ஆகியோரின் பாடல்கள் இடம் பெற்றிருந்தது. குமரி கிருஷ்ணாவின் நடனமும் அனைவரையும் மகிழ்வித்தது.

இறுதியாக திரு. தக்கலை பென்னி அவர்களின் நன்றியுரையுடனும் தேசிய கீதத்துடனும் இனிதே கூட்டம் நிறைவடைந்தது. அன்பின் விருந்தை சுவைத்து அனைவரும் சென்றனர்.

Fr.கிறிஸ்துதாஸ்
ஒருங்கிணைப்பாளர்.

---

## BIRTHDAY'S OF REV. FATHERS

| | | |
|---|---|---|
| FR. ERUPATHANCHILCHIRA SHOJO | : | FEBRUARY 07 |
| FR. MANGALATH LINSLAL | : | FEBRUARY 09 |
| FR. THKKETHALACKAL | : | FEBRUARY 15 |
| FR. MANIMALAKANDATHIL SEBI | : | FEBRUARY 21 |
| FR. KIZHAKKEYIL PETER | : | FEBRUARY 25 |
| FR. KULATHUMKAL JOSHY | : | FEBRUARY 28 |
| FR. MALIYIL PRINCE | : | FEBRUARY 28 |

## தக்கலை தீபம் - 8

## இறை பராமரிப்பின் சிறிய ஊழியர்கள்(LSDP)

எங்கள் சபையை நிறுவியவர் அருட்சகோதரி மேரி லிற்றி.




இவர் கோதமங்கலத்திலுள்ள ஓலியப்புரம் குடும்பத்தில் 1935 ஆகஸ்ட் 2-ம் நாள் பிறந்தார். கோதமங்கலத்திலுள்ள புனித அகஸ்டின் உயர்நிலைப்பள்ளியிலும், சங்ஙனாசேரி அஸம்ஷன் கல்லூரியிலும் தனது படிப்பை முடித்தார். 1955-ல் கோதமங்கலத்தில் உள்ள Medical Sisters of St. Joseph என்ற துறவற சபையில் சேர்ந்தார். துறவற உடையும், வார்த்தைப்பாடும் முடிநத் பின்பு அதிகாரிகள் இவரை மருத்துவ படிப்பிற்காக ரோம் நகருக்கு அனுப்பினர். இவர் ரோமில் படித்து கொண்டிருக்கும்போது Turine-ல் உள்ள புனித ஜோசப் கொத்தலங்கோ நிறுவிய இறை பராமரிப்பின் சிறு இல்லத்திற்கு ஒருமுறை செல்ல நேர்ந்தது. மாறாநோய் உள்ளவர்களும், யாரும் கவனிக்க இல்லாதவர்களுமான அநேக நோயாளிகளை இறை பராமரிப்பின் துணையாடல மட்டும் நடத்தி வந்த அந்த நிறுவனத்திலிருந்து தான் இவருக்கு இந்த நிறுவனம் தொடங்க தூண்டுதல் கிடைத்தது.



Founder- Rev Sr. Dr. Mary Lity

உரோமிலிருந்து M.D. பட்டப்படிப்பையும், இங்கிலாந்திலிருந்து ட்ரோபிக்கல் மருத்துவத்திலும், அயர்லாந்திலிருந்து பீடியாட்ரிக்ஸிலும் டிப்ளோமாக்களும் பெற்று இந்தியாவிற்கு திரும்பி வந்த இவர் தனது துறவற சபையின் (MSJ) பல மருத்துவமனைகளிலும் சேவை

செய்தார். பாவப்பட்டவர்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்ற விருப்பம் இப்போது அதிகமானது. இதனை தனது அதிகாரிகளிடம் கூறி துறவற சபையின் வெளியில் நின்று செயல்பட அனுமதியும் பெற்றார். ஜெபத்தில் கிடைத்த தூண்டுதல் அனுசரித்து குன்னந்தானம் எனுமிடத்தில் ஒரு இல்லம் துடங்குவதற்கான விருப்பத்தை மார் ஆன்றணி படியறா ஆயரை அறிவித்து அதற்கான அனுமதியும் பெற்றுக் கொண்டார்.

இறை பராமரிப்பில் முழுவதுமாக நம்பிக்கை வைத்து ஓலை மேய்ந்த ஒரு சின்ன வாடகை வீட்டில் நடக்கவோ, பேசவோ முடியாததும் தனிப்பட்ட காரியங்கள் ஒன்றும் செய்ய இயலாததுமான ஒரு நோயாளியுடன் 1978 ஜனவரி 17 அன்று தனது துறவற சபையின் செயல்பாட்டை துவங்கினார். பசியடக்க சாப்பாடோ, சமைக்க பாத்திரங்களோ, இருள்மாற்ற ஒரு விளக்கு கூட இல்லாமல் துவங்கிய இந்த சிறு இல்லத்திற்கு இறைவன் தகுந்த நேரங்களில் பல மனிதர்கள் வழியாக தேவையானது எல்லாம் நல்கி பராமரித்தார்.

## Little Servants of Divine Providence (LSDP)

நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தபோது அவர்களை கவனிப்பதற்காக சமர்ப்பித சந்நியாசிகளின் தேவையை கடவுள் மனதிலாக்கி கொடுத்தார். அதையனுசரித்து புதிய உறுப்பினர்களை சேர்த்து இறை பராமரிப்பின் சிறிய ஊழியர்கள் என்ற துறவற சபையை தொடங்க மார் ஆன்றணி படியறா ஆயர் அவர்கள் அனுமதி அளித்தார். இவ்வாறு 1978 டிசம்பர் 8-ம் நாள் அன்று ஒரு 'Pions Union' ஆக செயல்பட தொடங்கியது. 2001 செப்டம்பர் 8 அன்று இந்த சபை உயர் மறைமாவட்ட Congregation ஆக உயர்த்தப்பட்டது. இன்று பல மறைமாவட்டங்களிலாக 16 துறவற இல்லங்களும் 155 அருட்கன்னியர்களும் சேவை செய்கின்றனர். இப்போது 16 இல்லங்களில் ஆயிரத்திற்கடுத்து நோயாளிகளும் கவனிக்கப்பட்டு வருகின்றனர்.

### துறவற சபையின் நோக்கம்

இறை பராமரிப்பில் மட்டும் சார்ந்து திருப்பலியிலிருந்தும், நிரந்தரமான செபத்திலிருந்தும் சக்தி அடைந்து நோயாளிகளை கவனித்தல், நற்செய்தி அறிவித்தல், குடும்ப மறைபரப்பு பணி

போன்ற சேவைகள் தான் இச்சபையின் தனிப்பட்ட நோக்கம். மனவள்ர்ச்சியும், உடல் வளர்ச்சியும் குன்றியோர், தளர்வாத நோயாளிகள் போன்ற நோயாளிகள் தான் இச்சபையின் பராமரிப்பில் உள்ளவர்கள். தகர்ந்துபோன குடும்பங்களையும் அருட்கன்னியர்கள் சந்தித்து இயேசுவின் அன்பை பகிர்ந்து கொடுத்து குடும்ப மறைபரப்பு சேவையும் செய்கின்றனர். குடும்பங்களுடையவும், தனிப்பட்ட மனிதர்களுடையவும் ஆன்மீக வளர்ச்சிக்காக பல தியானங்கள் நடத்தி, ஜெபக்கூட்டாய்மைகள் மற்றும் கவுன்சலிங்கும்



வழங்குகின்றனர். இவை தவிர பங்குகளில் ஞாயிறு பாடசாலை, மிஷன் லீக், B.C.C கூட்டாய்மை, பிள்ளைகளின் செபகூட்டாய்மை போன்றவைகளுக்கு தலைமை தாங்குகின்றனர். தக்கலை மறைமாவட்டத்தின் முதல் ஆயரான மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆயர் அவர்கள் குன்னந்தானத்திலுள்ள துறவற இல்லத்தைக் கண்டு தக்கலை மறைமாவட்டத்திலும் ஒரு இல்லம் துவங்குவதற்கான விருப்பத்தை இத்துறவற சபையின் நிறுவனரும் தலைவருமாயிருந்த அருட்சகோதரி மேரி லிற்றி அவர்களிடம் கூறினார். அதையடுத்து 1997 டிசம்பர் 3-ம் நாள் தக்கலை மறைமாவட்டத்தில் கல்குறிச்சியில் ஒரு வாடகை வீட்டில் மனவளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் குன்றிய ஏழு பிள்ளைகளுடனும் 4 அருட்சகோதரிகளுடனும் செயல்பட துவங்கியது.

1998 July 28-ம் நாள் பெருஞ்சிலம்பு எனுமிடத்தில் 200 ஆட்கள் சேர்ந்து ஒரு ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கி தந்தனர். 1998 டிசம்பர் 14 அன்று புதிய இடத்தில் கட்டிடத்தின் பணி துவங்கியது. 1999 April 28-ம் நாள் புதிய இல்லத்தில் செயல்பட துவங்கியது. அநேக மனிதரின் உதவியால் கட்டட வேலைகள்

முடிவடைந்தது. இப்போது 90 பிள்ளைகளும் 7 அருட்சகோதரிகளும் உண்டு. நோயாளிகளின் எல்லா தேவைகளையும் அருட்சகோதரிகள் தான் செய்கின்றனர். இந்த இல்லத்திற்கு தேவையான எல்லா உதவிகளையும் சிறப்பாக அனுதின செலவுகள், நோயாளிகளுக்கு தேவையான உணவு, உடை மற்றும் மருந்துகள் எல்லாம் அநேக மனிதர்கள் வழியாக இறைவன் தகுந்த நேரங்களில் நிறைவேற்றி வருகிறார்.

இறைவனின் பராமரிப்பு எல்லோராலும் அனுபவிக்க முடியும். அதற்கான சில தகுதிகள்.

1. நம்மில் பாவம் இல்லாமல் இருக்க வேண்டும்.

2. இறைபராமரிப்பில் ஒரு நிமிடம் போலும் ஐயம் கொள்ளக் கூடாது.

3. ஒரு கட்டில் கூட காலியாக போடக்கூடாது. உள்ள வசதிகளை பயன்படுத்தி ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

இந்த தேவைகள் போலவே ஆன்மீக காரியங்களில் மேதகு ஆயர் அவர்களுடையவும் மற்று அருட்தந்தையர்களுடையவும் அன்பும் உதவியும் அதிகமாக கிடைக்கிறது. அது நோயாளிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. ஆகவே மேன்மேலும் எம் சபையும் இவ்வில்லமும் முன்னோக்கிச் செல்ல உங்கள் செப உதவியையும் பொருளாதார உதவியையும் தந்து வழிநடத்திட அன்பாய் வேண்டுகிறோம்...

---

## Pope Francis
# TWEETS



**Pope Francis** @Pontifex Jan 31
A credible witness to truth and to the values of the Gospel is urgently needed.



**Pope Francis** @Pontifex Jan 29
True love does not pay attention to the evil it suffers. It rejoices in doing good.

# வரலாறு அறிவோம்-9

## அருட்தந்தை தோமஸ் தெக்கேயில்



மண்ணில் : 27-03-1972
விண்ணில் : 14-12-2013

மண்ணில் நடப்பட்ட ரோஜா செடியிலிருந்து உருவான பல மலர்கள் மண்ணில் மலர்ந்து, விரிந்து, மணம் பரப்பி, இதழ் சுருங்கி, இதழ் பெயர்ந்து மண்ணை முத்தமிட்டு மண்ணை இணையும் முன்பாக இறைவனின் தோட்டத்திற்காக பெயர்த்தெடுக்கப்படுகின்றன. அவ்வகையில் விண்ணக தோட்டத்தில் மலர்ந்து விரிந்து மணம் பரப்ப பெயர்த்தெடுக்கப்பட்ட ஒரு அழகிய ரோஜா மலரே நம் பாசமிகு தந்தை தோமஸ் தெக்கேயில்.

**மண்ணில்:**

இறைப்பணிக்கு குறிப்பாக கத்தோலிக்க திருச்சபைக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களை அதிகம் வழங்கிய, கடவுளின் சொந்த நாடு என அனைவரைலும் அன்போடு அழைக்கப்படும் கேரள மண்ணில் இடுக்கி மாவட்டத்தில் மாங்குளம் என்னும் சிற்றூரில் திரு. மாத்யூ திருமதி அன்னம்மா ஆகியோரின் நான்கு குழந்தைகளில் முதல் குழந்தையாக 27--03-1972-ல் பிறந்தார். பிறப்பிலேயே படுசுட்டியாக பிற்நத அவர் படிப்பிலும், செயலிலுட் மிக வேகம்

கொண்டவராக இருந்ததால் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்து இவரை ஒரு தொழில் நுட்பக் கலைஞராக்க பெற்றோர் விரும்பி, ஒரு தொழில் பயிற்சி நிறுவனத்தில் ITI படித்து தேர்ச்சி பெற்றார். இவருக்கு இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு. பள்ளியில் படிக்கும்போதே திடீரென ஒரு சகோதரரை இழந்தார். அந்த அதிர்ச்சியில் ஒரே சகோதரியும் மனநோயாளி நிலைக்கு தள்ளப்பட்டார். இப்படி பல படிகளில் அடிமேல் அடிகொண்டது தான் இவரது சிறு வயது வாழ்க்கை. சோதனைகளை சாதனையாக்கி இறையழைத்தலை உணர்ந்தவராய் குருத்துவ மாணவனாக குருத்துவக் கல்லூரிக்குள் நுழைந்தார்.

**குரு மாணவனாக:**

கோதமங்கலம், கோட்டயம் போன்ற இளங்குருமடங்களில் தனது குருத்துவக் கல்லூரிப் படிப்பை சிறப்புடன் பயின்று மேற்படிப்புக்காக ஆலுவா போந்திபிக்கல் செமினாரியில் தன்னை இணைத்து தனது குருத்துவப் பயிற்சியை நிறைவு செய்து 22-04-2003-ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பணித்தலங்கள்:**

நவம்பர் 22, 2003 தக்கலை மறைமாவட்டத்தில் தனது பணியைத் தொடங்கிய அருட்தந்தை முதன் முதலாக இறையழைத்தல் பணியின் இணை இயக்குநராக நியமனம் பெற்று சிறப்புடன் பணியாற்றினார். அதே ஆண்டு ஜுன் திங்கள் 1ஆம் நாள் முஞ்சிறை புனித ஜார்ஜியார் இல்லத்தில் தங்கிக் கொண்டு, துணைப் பங்குத்தந்தையாக முஞ்சிறை, கிள்ளியூர், மாதாபுரம் போன்ற பங்குகளில் பணியாற்றினார்.

**பங்குத்தந்தையாக:**

2004 ஜுன் 1ஆம் நாள் கழுவன்திட்டை புனித மார்டின் டி போரஸ் பங்கின் பங்குத்தந்தையாகப் பணியமர்த்தப்பட்டு பாங்குடன் பணியாற்றினார். அவ்வேளையில் தான் ஆலய கட்டுமானப் பணிக்கான முயற்சி மேற்கொண்டார். தொடர்ந்து ஜுன் 1, 2005இல் நம்பிக்கை ஆலயம் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளியின் மேலாளராக நியமிக்கப்பட்டார். அதன் வளர்ச்சிக்காக உழைத்தார்.

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்:

2006-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாள் முதல் தக்கலை மறைமாவட்டத்தின் சமூகசேவைச் சங்கத்தின் இயக்குனர் மற்றும் செயலராக தெரிவு செய்யப்பட்டு பணியமர்ந்தார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் முதுமொழிக்கேற்ப அதன் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார். தரை தளம் மட்டும் அமைந்த அக்கட்டிடத்திற்கு மேல் தளம் அமைத்தார். பணியாட்களோடு பணியாளனாக தன்னையும் இணைத்துக் கொண்டு பணியாற்றினார். அனைத்து சுய உதவிக் குழுக்களையும் முறைப்படுத்தி செயல்பட வைத்தார். சிறுவயதிலேயே தாம் பெற்ற அனுபவத்தில் அந்த வளாகத்தை நல்லதொரு பூந்தோட்டமாக மாற்றினார். பிப். 1, 2007இல் கல்லுவிளை அன்னைத் தெரசா ஆலய பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து, ஆலய வளர்ச்சிக்காகவும், பாடுபட்டார். செபமாலை பக்தியில் ஈர்க்கப்பட்டதன் விளைவாக மாதா கெபி (எழ்ற்றற்ர்) ஒன்றையும் அங்கு அமைத்தார். பங்கு மக்களோடு இணைந்து இரவில் செபமாலை செய்வதையும் வழக்கமாகக் கொண்டு தனது ஆன்மீக வாழ்விலும் அக்கறையுடன் காணப்பட்டார்.

அலுவலக வேலை நிறைவுற்றவுடன் ஒரு நல்ல தோட்டக்காரனாக மாறி விடுவார். மாலை நேரங்களில் அவரை ஒரு மண் வெட்டியுடன் தான் நாம் காண இயலும். இவ்வாறு சிறந்த நிர்வாகியாக, பங்குக் குருவாக, பணியாளனாகக் காணப்பட்டு சமூகப் பணியில் அக்கறை கொண்டு வாழ்ந்தவர். ஓஓநநந'ல் நிலுவையில் விடப்பட்ட கடன்களை நேரடியாகச் சென்று பிரித்து அதன் நிதி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டார்.

கல்லுவிளை ஆசீர் அரங்கம் அவரின் முழு முயற்சியில் வாங்கப்பட்டது. அதற்காக அவர் பட்ட பாடுகள் விவரிக்க இயலாதவை. குமரி திருத்தொண்டின் 50ஆம் ஆண்டை நினைவு கூர்ந்து அந்நிறுவனம் தேசிய நெடுஞ்சாலையில் உயர்ந்து நிற்கிறது.

கல்லுவிளை அன்னைத் தெரசா ஆலயப் பணியோடு இணைந்து பிப். 1, 2007 முதல் பெருஞ்சிலம்பு மனவளர்ச்சி குன்றியோர் இல்லத்தின் ஆன்மீக இயக்குநராகவும் பணியாற்றினார். தினமும் அங்குச் சென்று திருப்பலி நிறைவேற்றுவதை ஒரு கடனாகச் செய்து வந்தார்.

இவ்வாறு சிறப்புடன் ஏற்றப் பணியை சிரமேற்கொண்டு சீரியப் பணியாற்றியதன் விளைவாக மறைமாவட்டம் அவரை உயர்ந்த நிலைக்கு கொண்டு போய்க் கொண்டிருந்தது. ஆம்! விவிலியத்தில் நாம் காண்கிறோமே; சிறியவற்றில் நீ சிந்தனையுள்ளவனாய் இருந்தால் பெரியவற்றிற்கு உன்னை அதிகாரியாக்குவேன் என்ற இறைவார்த்தையை. மறைமாவட்ட உயரிய பொறுப்புகளில் ஒன்றான மறைமாவட்ட பொருளாளராக நியமிக்கப்பட்டார்.

**மறைமாவட்ட நிதி ஆலோசகர்:**

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 22-இல் மறைமாவட்ட நிதி ஆலோசகராக இன்றைய சீரோமலபார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் அன்றைய தக்கலை மறைமாவட்ட ஆயருமான கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களால் நியமிக்கப்பட்டார். மறைமாவட்ட அங்கத்தினராகவும், நிதி ஆலோசகராகவும், நிதி காப்பாளராகவும் திறம்பட செயல்பட்டார். அன்றைய ஆயர் தலைமை ஆயராக உயர்த்தப்பட்ட பின்னர் தக்கலை மறைமாவட்டமானது பரிபாலகரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நெருக்கடி காலகட்டத்திலும் தனது சிந்தனையாலும், செயல்பாட்டாலும் திறம்பட செயல்பட்டார். குமரி திருத்தொண்டுப் பணியின் பொன்விழாவும், தற்போதைய ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் ஆயர் திருநிலைப்பாட்டு விழாவையும் முன்னின்று நடத்தினார்.

2010-ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் நாளில் மாதாபுரம் புனித தோமையார் ஆலயப் பங்குப் பணியாளராகவும், 2011-ஆம் ஆண்டு ஜூன் 1-ஆம் நாள் தக்கலை புனித மேரி ஆலயப் பங்குப் பணியாளராகவும் நியமிக்கப்பட்டு செயல்பட்டார்.

கடின உழைப்பாளியாகவும், ஆபத்து காத்தானாகவும், எப்போது அழைத்தாலும் ஓடோடி வந்து உதவி செய்பவராகவும் செயல்பட்ட அவர் ஏழைகள் மேல் இரக்கம் கொண்டு பல ஏழைகளுக்கு பொருளுதவியும், திருமண உதவியும், வீடு கட்ட உதவியும் வழங்கினார் என்பது அவரது கருணையின் வெளிப்பாடு.

**செங்கோட்டை மிஷன் வேலை:**

2013-ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் நாள் செங்கோட்டை மிஷனின் ஒருங்கிணைப்பாளராகவும், புலரி சமூக சேவை

சங்கத்தின் இயக்குனராகவும், வாஞ்சி நகர் புனித மரியன்னை ஆலயப் பங்குப் பணியாளராகவும் நியமிக்கப்பட்டதன் மூலமாக மிகப் பெரிய ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் அதன் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு, பல முயற்சிகளை மேற்கொண்டார் அந்த மிஷன் வளர்ச்சிக்காக. ஆனால் இறைத் திட்டம் வேறாக இருந்தது.

**விண்ணில்..**

அந்த இறைத்திட்டத்தின் படி தந்தை அவர்கள் புற்றுநோயால் ஆட்பட பல்வேறு மருத்துவமனைகளிலும் சிகிட்சைபெற்று இறுதியில் 2013ஆம் ஆண்டு டிசம்பர் 14இறைமடியில் தஞ்சமடைந்தார். தந்தை அவர்களின் உடல் அஞ்சலிக்காக கல்லுவிளையில் வைக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாக பளுகல் பங்கில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு சொந்தப் பங்கான கேரளாவின் மாங்குளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. தந்தை அவர்கள் இம்மண்ணை விட்டு மறைந்தாலும் தந்தையவர்கள் மறைமாவட்டத்திற்கு ஆற்றிய பணியை மறைமாவட்டம் என்றும் நன்றியுணர்வுடன் பின்பற்றி வருகிறது.

திரு. எட்வின்சன்,
பாலப்பள்ளம்

---

## Pope Francis TWEETS




**Pope Francis** @Pontifex We who are Christians, members of God's family, are called to go out to the needy and to serve them.



**Pope Francis** @Pontifex Jan 17
The com-passion of God, his suffering-with-us, gives meaning and worth to our struggles and our sufferings.



**Pope Francis** @Pontifex Jan 16
The family is the greatest treasure of any country. Let us all work to protect and strengthen this, the cornerstone of society.



**Pope Francis** @Pontifex Jan 14
Saint Joseph Vaz, teach us to grow in holiness and to live the Gospel's message of mercy.

# அருட்சகோதரிகள் வருகை...

## FCC அருட்சகோதரிகள்

செங்கோட்டை திருத்தொண்டுத்தளத்தில் பணியாற்ற FCC துறவற சபையைசார்ந்த காஞ்சிரப்பள்ளி தூய தோமையார் வட்டாரத்தின் அருட்சகோதரிகள் லிஸி, பிளவர்லெட், கிளேர், அல்போன்ஸ் ஆகிய நான்கு அருட்சகோதரிகள் ஜனவரி 17 அன்று வருகை தந்தார்கள். இவ்வரவேற்பு நிகழ்வு செங்கோட்டை புதூர் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. முன்னதாக அருட்சகோதரிகளின் வாடகை இல்லம் ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. தொடர்ந்து புதிதாக பணியாற்ற வந்த அருட்சகோதரிகளை ஆயர் அவர்கள் பொன்னாடைபோர்த்தி பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். குருகுல முதல்வர் FCC துறவற சபையின் மாநில தலைவி அருட்சகோ. ஜூலி, அருட்தந்தை மாத்யூ அறக்கல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து ஒருசில கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. அருட்சகோ ஜூலி அவர்கள் நன்றிகூற அகாப்பேயுடன் இனிதே நிறைவடைந்தது.



## SJSM அருட்சகோதரிகள்

முதன் முறையாக தக்கலை மறைமாவட்டத்தில் பணியாற்ற SJSM துறவற அருட்சகோதரிகள் வருகை தந்துள்ளனர். அதற்காக ஆனையடி திருத்தொண்டுதளத்தில் புதிய இல்லமும், ஆசிரியர் பயிற்சி நிறுவனுமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வில்லத்தின் அர்ச்சிப்பு விழா ஜனவரி 19 அன்று காலை 10.30 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



புதிய அருட்சகோதரிகளின் பணி சிறக்க வாழ்த்துக்கள்..!

Bishop George Rajendran sdb
DIOCESE OF THUCKALAY

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District - 629175
Tamil Nadu, India

# BISHOP'S ENGAGEMENTS

**February 2015**

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sunday | 10.00 am<br>2.00 pm | Youth Mass, Netta<br>Inauguration of Religious Year, Padanthalumoodu |
| 2 | Monday | | Bishop's House |
| 3 | Tuesday | 11.00 am | KKSSS GB meeting |
| 4 | Wednesday | 11.00 am | Holy Qurbana, Kottayam |
| 5 | Thursday | 4.00 pm | Mount Carmel school anniversary, Muzhucode |
| 6 | Friday | 10.00 am<br>3.00 pm | Kumari Rubber farmers rally, Kulasekaram<br>KKSSS, AIDACT metting >> Chennai |
| 7-8 | | | Confirmation, Chennai >> Thuckalay |
| 9 | | | Bishop's House |
| 10 | Tuesday | 9.00 am | Priest conference\|Minor seminary Home day |
| 11 | Wednesday | 9.30 am<br>4.00 pm | Curia<br>Matha TV, Shooting |
| 12 | Thursday | 2.30 pm<br>6.00 pm | Inter-department meet, Bishop's House<br>Family Visit, Plankarai |
| 13 | Friday | 12.00pm<br>6.00 pm | Meeting at Allappy<br>Thuckalay Friends of Changacherry, meeting |
| 14 | Saturday | 10.00 am | Tamil medium HM's meeting<br>Feast day Qurbana at Chenamcode |
| 15 | Sunday | 7.30 am<br>6.00 pm | Pastoral visit, Christurajapuram<br>DNN anniversary, Karode |
| 16-18 | Mon-Wed | | Ash-Monday \| Bishop's House |
| 19 | Thursday | 4.00 pm | School anniversary, Kulasekaram |
| 20 | Friday | | Bishop's House |
| 21 | Saturday | 2.30 pm | Anniversary, Karunai Illam |
| 22 | Sunday | 1.30 pm | Sts. Chavara and Euphrasia Celebration |
| 23 | Monday | 12.00 pm | Blessing of Milk plant, Sengottai |
| 24 | Tuesday | 4.00 pm | Episcopal ordination of Mongr. Jeromedas sdb<br>>> Ootty for TNBC |
| 25-27 | | | TNBC >> Thuckalay |
| 28 | Saturday | 4.00 pm | Conclusion of special classes for deacons |
| 1st Mar | Sunday | | Pastoral visit, Varuthattu |

*Fr. **K. J. Antony** SDB*
*Diocese Secretary*

**இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு**
***iraiarultkly@gmail.com***
**செய்திகள் அனுப்ப கடைசி நாள்: 20 பிப்ரவரி**